**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S.24/2019**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | **:** | **DW.1** |
|---|---|---|
| Name | : | கணேஷ்குமார் |
| Father's / Husband's Name | : | பொன்மலைச்சாமி |
| Village / முகவரி | : | தென் பொன்முடி, |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Caste / ஜாதி | : | |
| Calling / தொழில் | : | |
| Religion / மதம் | : | |
| Age / வயது | : | 38 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 22nd October 2024.

முதல் விசாரணை

நான் தென்பொன்முடியில் வசித்து வருகிறேன். நான் 3ம் பிரதிவாதியாகிய எனக்காகவும் 6ம் பிரதிவாதியின் உரிமையாளர் என்ற முறையிலும் சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். எனது தரப்பு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. பழனிக்கவுண்டர் பெயரிலுள்ள 27.05.1964 தேதியிட்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1.

2. பழனிக்கவுண்டர் என்பவர் 20.12.2023 தேதியிட்ட உயில் சாசனம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2. ( அசல் உயில் ஆவணம் தாக்கல் செய்யவில்லையென 5 ம் பிரதிவாதியின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

3. அசல் வழக்கு எண்.307/2006 வழக்கின் சமரச தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3.

4. எனது தந்தை பொன்மலைச்சாமி என்பவர் 23.09.2015 தேதியிட்டு எழுதி வைத்த உயில் சாசனம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4. ( அசல் உயில் ஆவணம் தாக்கல் செய்யவில்லையென 5 ம் பிரதிவாதியின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

5. எனது தந்தை பொன்மலைச்சாமியின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ 5.

6. நான் 7 ம் பிரதிவாதியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு எழுதிக் கொடுத்த MOD (அடமான பத்திரம்) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6.

7. 7 ம் பிரதிவாதி கொடுத்த 26.03.2021 தேதியிட்ட அடமான செல்லு ரசீது சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7

8. எனது அப்பா பொன்மலைச்சாமி 05.03.2015 தேதியிட்டு எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத குத்தகை பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.8

9. எனது அப்பா பொன்மலைச்சாமி 26.08.2013 தேதியிட்டு எனக்கு எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9.

10. நான் 7 ம் பிரதிவாதியான ஐசிஐசிஐ வங்கிக்கு எழுதிக் கொடுத்த MOD (அடமான பத்திரம்) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10.

11. பெள்ளேபாளையம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதென கொடுத்த சான்று அசல் பி.வா.சா.ஆ.11

12. தாவா சொத்தை பொறுத்து பட்டா எண்.1219, 2472, மற்றும் 2473 கொண்ட சிட்டாக்கள் (3) பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ 12 வரிசை .

13. தாவா சொத்தை பொறுத்து க.ச.எண். 301/4, 305/3, மற்றும் 305/5 கண்டுள்ள அடங்கல் அசல் பி.வா.சா. ஆ,13. வரிசை

14. தாவா சொத்தை பொறுத்து பட்டா எண். 1997, கொண்ட சிட்டா பதிவிறக்க நகல்

பி.வா.சா. ஆ,14.

தாவாவை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

குறுக்கு விசாரணை

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.